(எட்டாவது பாராளுமன்றம் -மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 19.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 சனவரி 23, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ வீ. எஸ். இராதாகிருஷ்ணன்,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வடிவேல் சுரேஷ்,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ அப்துல்லா மஹரூப்,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ மஹிந்த அமரவீர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம**

**கௌரவ லஸந்த அலகியவன்ன**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ பியசேன கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ கௌரவ சாந்த பண்டார

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ ரொசான் ரணசிங்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ மஹிந்த சமரசிங்க**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ திலங்க சுமதிபால**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன**

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா**

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்,—

(i) 2015 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXVII ஆம் பகுதியையும், மூன்றாவது தொகுதியின் IX ஆம் பகுதியையும்; மற்றும்

(ii) 2017 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் II, III மற்றும் IV ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் III ஆம் பகுதியையும், எட்டாவது தொகுதியின் II ஆம் பகுதியையும், பத்தாவது தொகுதியின் XXII, XXIII, XXIV, XXVII, XXVIII, மற்றும் XXIX ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவை அனுமதியுடன் மகாவலி அபிவிருத்தி மற்றும்

சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மே 25 ஆம் திகதிய 2072/58 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கரையோரப் பிராந்தியம் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திட்டம் – 2018 ஐச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான கட்டிடத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை சுகாதாரம், மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல் :** (1) உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ காமினி லொக்குகே சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ சி. சிறீதரன் அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் வருடாந்த அறிக்கைகள்;

(ii) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கைகளும் ஆண்டுக் கணக்குகளும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகள்;

(iv) 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்) அலுவலகத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(v) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வருடாந்த செயற்றிறன் அறிக்கைகளும் கணக்குகளும்;

(vi) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கைகள் மற்றும் கணக்குகள்;

(vii) 2012, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை;

(viii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளக அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(ix) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(x) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் செயல் மதிப்பீட்டு அறிக்கைகள்;

(xi) 2017 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(xii) 2017 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசானின் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(xiii) 2012, 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை மன்றத்தின் ஆண்டறிக்கைகளும் கணக்குகளும்; மற்றும்

(xiv) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை கள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஹர்ஷன ராஜகருணா சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கை;

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்று அறிக்கை;

(iii) 2016 ஆம் ஆண்டுக்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் ஆண்டறிக்கை;

(iv) 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை;

(v) 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை;

(vi) 2016 ஆம் ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஆண்டறிக்கை;

(vii) 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் ஆண்டறிக்கை; மற்றும்

(viii) 2016 ஆம் ஆண்டுக்கான கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பதுளை, ரத்வத்த மாவத்தை, இல. 23/1 எப் இல் வதியும் திருமதி எம்.டப்ளியூ. நந்தன குமாரிஹாமியினது 2018.08.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ டிலான் பெரேரா சமர்ப்பித்தார்.

(2) பன்னிபிட்டிய, தெபானம, பொரளை வீதி, இல. 59 இல் வதியும் திரு. எஸ்.ஆர்.எஸ்.எம். சமரக்கொடியினது 2017.11.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும் கௌரவ உதய பிரபாத் கம்மன்பில சமர்ப்பித்தார்.

(3) ஹிங்குரக்கொட, நுவரவத்த, இரண்டாம் ஒழுங்கை, இல. 33 இல் வதியும் திருமதி பி.டப்ளியூ.ஐ.ரீ. குமாரிஹாமியினது 2018.08.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எஸ். பிரேமரத்ன சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. கடன் இணக்கம் (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக” என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

“கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன தலைமை தாங்குவாராக” என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.11 மணிக்கு கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக” என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.27 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

“கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்குவாராக” என உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.48 மணிக்கு கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்கினார்.)

(பி.ப. 6.02 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 9 முதல் 13 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> “(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஐந்து உறுப்பினர்களை" என்னும் சொற்களிலிருந்து தொடங்கி "பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்கள் வரையான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-
>
> "அது, அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பதினொரு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1 ஆம் பக்கத்தில் 17 முதல் 26 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (i ) மேல்நீதிமன்ற நீதிபதியொருவராக அல்லது மாவட்ட நீதிபதியொருவராகப் பதவிவகிக்கின்ற அல்லது பதவிவகித்துள்ள; அல்லது

(ii ) சட்டத்தரணியொருவராகப் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தையுடைய,

ஆட்களைக் கொண்டுள்ள ஏழு உறுப்பினர்கள்; அத்துடன்

(ஆ) (i ) சட்டத்தரணியொருவராகப் பத்தாண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தையுடைய;

(ii ) இலங்கை நிருவாக சேவையில் அல்லது ஒரு நாடுதழுவிய சேவையில் வகுப்பு I அலுவலர் என்ற பதவியை வகிக்கின்ற அல்லது வகித்துள்ள; அல்லது

(ii ) வியாபாரம் மற்றும் வர்த்தகத்துறையில் அனுபவம்கொண்டுள்ளவரான

ஆட்களைக்கொண்டுள்ள நான்கு உறுப்பினர்கள்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 1 முதல் 11 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

'(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைச் சபையின் தவிசாளராகவிருப்பதற்கு அமைச்சர் நியமித்தல் வேண்டும்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 முதல் 5 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தப்பட்டவாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்சார்பாக அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. ஒத்திவைப்பு (மன்னார் மாவட்ட மீன்பிடிப் படகுக் கால்வாய்களின் புனரமைப்பும் காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வும்)**: "இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்படடது.

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக" என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 6.18 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி, பாராளுமன்றம் பி.ப. 7.12 மணிக்கு, 2019 சனவரி 24 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 வரை ஒத்திவைக்கப்பட்டது